# அவசரக் கூட்டம்

அன்புடையீர்

வணக்கம். பல்லடம் நகர்மன்ற அவசரக்கூட்டம் வருகிற **12.01.2024** வெள்ளிக்கிழமை அன்று மாலை **4.00** மணியளவில் நகர்மன்றத்தலைவர் திருமதி.கவிதாமணி ராஜேந்திரகுமார்,B.B.M., அவர்களின் தலைமையில் நகர்மன்றக்கூட்ட அரங்கத்தில் நடைபெறுவதால் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## பொருள் : 01

பல்லடம் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.23.11.2023 ம் தேதியிட்ட அரசாணை நிலை 142–ன்படி நகராட்சி அருகாமையில் உள்ள கிராம ஊராட்சிகளை ஒருங்கிணைந்து எல்லை விரிவாக்கம் செய்ய பிரேராணை கோரப்பட்டுள்ளது. பல்லடம் நகராட்சி 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் 42243 மக்கள் தொகையினை கொண்டு 19.42 ச.கி.மீ பரப்பளவு கொண்டும் 18–வார்டுகளாக பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. பல்லடம் நகராட்சியில் இயல்பு நிலை கணக்கு நடைமுறையில் வருவாய் மற்றும் மூலதன நிதி நிர்வகிக்கப்பட்டு அதன்படி நகராட்சியின் ஆண்டு வருமானம்

| | |
|---|---|
| 2020 – 2021 ஆம் ஆண்டு வருமானம் | ரூ.1960.026/–(இலட்சத்தில்) |
| 2021 – 2022 ஆம் ஆண்டு வருமானம் | ரூ.1898.428/–(இலட்சத்தில்) |
| 2022 – 2023 ஆம் ஆண்டு வருமானம் | ரூ.2333.083/–(இலட்சத்தில்) |

இந்நகராட்சியின் சராசரி வருமானம் ரூ.2063.84 (இலட்சத்தில்) உள்ளது. மேலும், அருகாமையில் உள்ள ஆறுமுத்தாம்பாளையம் ஊராட்சி, மாணிக்காபுரம் ஊராட்சி மற்றும் வடுகபாளையம்புதூர் ஆகிய மூன்று கிராம ஊராட்சிகளை ஒருங்கிணைத்து எல்லை விரிவாக்கம் செய்தால் நகரின் பரப்பளவு 19.42 லிருந்து 64.37 சதுர கி.மீ ஆகவும் வருவாய் 2063.84 லட்சத்திலிருந்து ரூ.2371.15 லட்சமாக உயர வாய்ப்பு உள்ளது. எனவே, இந்நகராட்சியின் எதிர்கால வளர்ச்சியினை கருத்தில் கொண்டு மேற்கண்ட அரசாணையின்படி மூன்று கிராம ஊராட்சிகளை ஒருங்கிணைத்து எல்லை விரிவாக்கம் செய்ய மாவட்ட ஆட்சியர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் மூலமாக அரசிற்கு உரிய கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**